ஹர சங்கர சிவ ! ஜய சங்கர சிவ ! சிவ சங்கர சிவ ! சங்கர சிவ !
ஹர சங்கர சிவ ! ஜய சங்கர சிவ ! சிவ சங்கர சிவ ! சங்கர சிவ !

ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி

ஸ்ரீ ஜகத்குரு தமிழட்சரப் பாமாலை




தென்னாடுடைய பெரியவா போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
சர்வக்ஞா சர்வவ்யாபி பெரியவா சரணம்மாயப்பிறப்பறுக்கும் மஹா பெரியவா அடி போற்றி!

ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி

# ஸ்ரீ ஜகத்குரு தமிழட்சரப் பாமாலை

(126 வரிகளை உள்ளடக்கிய இந்த தமிழட்சரப் பாமாலை ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவாளின் பெருமையை உணர்த்தும் விதத்தில் கவிமணிமாலையாக புனையப்பெற்றது)




**இசை வெளியீடு**:

ஸ்ரீ ஜகத்குரு தமிழட்சரப் பாமாலை இசைத்தட்டு வடிவினை பத்மபூஷன் ஸ்ரீ விக்கு விநாயகராம் அவர்கள் வழங்க ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஸ்ரீ சங்கர விஜயேந்திர ஸரஸ்வதி சுவாமிகள் அருட்கரத்தினால் கடந்த 2019, அக்டோபர் 10ஆம் தேதியன்று சென்னையில் வெளியிடப்பட்டது.

**YouTube Link: https://youtu.be/m74s6dK3MM4**

பாடியவர்: New Jersey ஸ்ரீ சுவாமிநாத பாகவதர் எழுதியவர்: ப்ரஹ்மஸ்ரீ சுப்ரமணிய கிருஷ்ணமூர்த்தி

Email: newjerseyswaminathan@gmail.com YouTube Link: https://youtu.be/m74s6dK3MM4

WhatsApp number: 001-7323258695

## ஸ்ரீ ஜகத்குரு தமிழட்சரப் பாமாலை மஹிமை:

(வாயினால் உன்னைப் பரவிடும் அடியேன் படுதுயர் களைவாய் பாசுபதா பரஞ்சுடரே)

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாபெரியவாளின் மகிமை

சுகப்பிரம்மரிஷி அவர்களை சாட்சாத் தரிசிப்பது போலவே ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாபெரியவாளின் தரிசனமும் தவவலிமையும் நமக்கெல்லாம் பெரும்பாக்யத்தை நல்கியிருக்கிறது. அதன் ரகசியம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாபெரியவா சாட்சாத் ஈஸ்வரரின் திருஅவதாரம் என்பதால்தான்.

தான் அந்த சர்வேஸ்வரர்தான் என்ற தெய்வ ரகசியத்தைக் காப்பாற்றுவதற்கே இந்த திருஅவதாரத்தில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாபெரியவா தன்னை அத்தனை எளிமையாக காண்பித்துக் கொண்ட பிரயத்தனம் குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் அதையும் மீறி இவர் சாட்சாத் சங்கரரே என்பதை பக்தர்கள் உணர்ந்த சம்பவங்களையும் பரப்பிரம்ம சொரூபமாக தானே ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவா அருளியுள்ளார்.

இப்படி ஒரு பக்தர் தன் மேல் இயற்றிய கவியில் வரிக்குவரி ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாபெரியவாளை 'சங்கர சிவா' என்று போற்றுவதை தான் ஏற்றுக் கொள்ளும் விதமாக ஒரு அற்புத சம்பவத்தை இந்த நடமாடும் தெய்வம் நமக்கெல்லாம் தான் ஈஸ்வரரே என்பதை வெளிப்படுத்தும் விதமாக அருளி அந்த அருள்பெற்ற கவிஞரையும் அனுக்ரஹித்துள்ளார்.

கவிகுஞ்சரம் என ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாபெரியவாளின் திருவாக்காலேயே அருளப்பட்டவரான கவிச்சக்ரவர்த்தியாம் ஸ்ரீ வைத்தியநாத சர்மா அவர்கள் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவாளை 'திங்களஞ்சடை சிவபிரான்' என உணர்ந்து கவி பாடியது போலவே அவர்தம் சகோதரி அஞ்சனாட்சி அம்மாள் பெற்றெடுத்த அருட்கவியாம் சுப்ரமணிய கிருட்டிணமூர்த்தியும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவாளை அதே கோணத்தில் சிலாகித்து கவி இயற்றும் பாக்யம் அருளப்பட்டுள்ளது.

இந்த பெரும் பாக்யம் யாவும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவாளன்றி வேறு தெய்வமில்லை என உலகோருக்கு சர்வகாலமும் உபதேசித்த வைத்தியநாத சர்மாவின் தவப்புதல்வரும், கிருட்டிணமூர்த்தியின் சகோதரி மாதுஸ்ரீ வேதாம்பாளின் கணவருமான பிரம்மஸ்ரீ பிரதோஷ சிவநாயன்மாரால்தான் இவருக்கு கிட்டியுள்ளது.

ஒருமுறை மாதுஸ்ரீ வேதாம்பாளுடன், கிருட்டிணமூர்த்தியும் வடக்கே உகார் என்ற ஊரில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவாளின் தரிசனத்திற்கு சென்ற சமயம், வேதாம்பாள் சங்கர பெரியவாளுக்கு மங்கள ஆரத்தி காட்டும்போது, கிருட்டிணமூர்த்தி தன் மாமா இயற்றிய 'திங்களஞ் சடை சிவபிரான்' என்ற பாடலை பாடியுள்ளார்.

"உன் மாமனார் பாடின பாட்டு இவருக்கு எப்படித் தெரிஞ்சது?" என்று ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவா வேதாம்பாளை கேட்க" இவர் என் தம்பிதான். கவி சக்ரவர்த்தி இவருக்கும் மாமாதான்" என்று வேதாம்பாள் கூறினார்.

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவா தன் கமலமுகம் மலர புன்னகையோடு இவரை வாழ்த்திய தருணத்தில் இவருக்கு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவாளைப் போற்றி கவி இயற்றிய உத்வேகம் பிறந்திருக்க வேண்டும். இதற்கு முன்னும் சில சின்ன சின்ன பாடல்களால் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவாளுக்கு பாமாலை புனைந்திருந்தாலும் இப்போது ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவாளை சாட்சாத் ஈஸ்வரரே என்பதாக போற்றிப் பாட வேண்டுமென இவருக்கு தோன்றியதோ என்னவோ.

பகவான் ஸ்ரீரமணர் இயற்றி அருளிய ஸ்ரீ அருணாசல அட்சரமணமாலை என்ற புனிதமான பாமாலையை தன் பாமாலைக்கான அடிப்படையாக கொள்ள இவர்தம் மனதில் தோன்றியது. இரண்டு இரண்டு வரிகளாக மிகவும் சிரத்தையோடு இயற்றி வந்து தன் சகோதரியிடம் படித்துக் காட்டுவதும் அதன் பின் அடுத்த வரிகளை எழுதுவதுமாக ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹா

பெரியவாளின் 86வது ஜயந்தி உற்சவங்களின்போது 'ஸ்ரீ ஜகத்குரு தமிழட்சர பாமாலை' எனும் 126 வரிகள் கொண்ட பாமாலை பூர்த்தியடைந்தது.

இந்த பாமாலையை ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவாளிடம் ஜயந்தி உற்சவத்திற்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டுமென்று எண்ணம் கொண்டவராய் பிரம்மஸ்ரீ பிரதோஷ நாயன்மார், ஸ்ரீ ஏகாம்பரம் என்று ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவாளுக்கு பணிவிடை செய்யும் பாக்யம் பெற்ற அன்பரிடம் கொடுத்தனுப்பினார். மீரஜ் என்ற ஊரில் இதை சமர்ப்பித்தபோது ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவா எப்படி அருளினார் என்பது அதிசயம். இந்த கவி வரிகள் 'குருவாய் எமக்கருள் பெரிதாம் பரம்பொருள் குரு சங்கரரவர் பதம் எண்ணி' என்று தொடங்கியதும், ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவா அங்கு தரிசித்து நின்ற பக்தர்கள் கூட்டத்தில் ஒரு பக்தரை மட்டும் கைத்தட்டி அழைத்து கவிதையின் ஒரு பிரதியை அளித்தாராம். இதில் அதிசயம் என்னவென்றால் இந்தப் பாமாலையை பெற்றுக் கொண்ட அந்த பக்தரின் திருநாமமும் 'குரு சங்கரர்' என்பதே. இதை அன்று தரிசித்த பக்தர்கள் உணர்ந்து மெய்சிலிர்த்தனராம்.

முதலில் சமர்ப்பித்த போதே இப்படி ஒரு அங்கீகாரத்தை அடைந்த பாமாலையை பற்றி பிரத்யேகமாக மாதுஸ்ரீ வேதாம்பாளிடம் அடுத்த தரிசனத்தின்போதும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவா விசாரிக்க நேர்ந்தது. தரிசித்துக் கொண்டிருந்த பக்தையிடம், ஸ்ரீ ஏகாம்பரம் அவர்களை விட்டு "தம்பி போட்ட புத்தகத்தோட பேரு என்னன்னு தெரியுமா கேளு" என்றார் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவா. மாமிக்கு அதற்கான பதில் தெரியவில்லை. அந்தப் பாடலை இத்தனை குறிப்பாக ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவா கேட்பாரென்று எதிர்ப்பார்க்காததாலும், உண்மையில் அந்த பாமாலையை அத்தனை சிரத்தையாக தெரிந்துக் கொள்ளாமல் விட்டிருந்ததாலும், ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவாளிடம் தக்க பதிலளிக்க முடியாமல் பக்தை நின்றாள்.

ஸ்ரீ ஏகாம்பரம் இந்த தர்மசங்கடத்தை விலக்குவது போல பக்தையிடம் காதும் காதும் வைத்தாற்போல் "ஜகத்குரு தமிழட்சரப் பாமாலைன்னு சொல்லுங்கோ" என்று உதவினார். வேதாம்பாளும் அப்படியே ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவாளிடம் சொல்லி அப்போதைக்கு திருப்தியுற்றாலும், இந்த பாமாலையை பற்றி அறியாமல் விட்டுவிட்டோமே என்ற குற்ற உணர்வோடு பின் நாட்களில் அப்பாமாலையை படித்து அறிந்துக் கொண்டார்.

மீண்டும் ஒரு தரிசனம், சதாராவில் இரண்டு நாட்கள் மாமி ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவாளை தரிசித்து தங்கியபோது நிகழ்ந்தது. இந்த நாட்களில் ஒரு நாள் மாமியுடன் கூட ஒரே ஒரு பையன் மட்டும் நிற்க
ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவாளை தரிசித்த தருணம் அது.

இப்போது ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவா இந்த பாமாலை புத்தகம் ஒன்றை வேதாம்பாளிடம் எடுத்து தானே கொடுத்தருளி "இதைப் பாடச் சொல்லு" என்றார். மாமியும் பாமாலையை இசையுடன் பாடத் துவங்கி பத்துப்பதினைந்து வரிகள் முடித்திட்டபோது ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவா ஏனோ போதும் என்பதாகக் கூறி பக்கத்தில் நின்ற அந்த பையனிடம் பாமாலையை தொடர்ந்து பாடச் சொல்லி அருளினார்.

இது பக்தையான மாதுஸ்ரீ வேதாம்பாளிடம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாபெரியவா மீண்டும் மீண்டும் ஏதோ இந்த பாமாலையின் விசேஷத்தை உணர்த்துவதற்காகவே அனுக்ரஹிப்பது போலிருந்தது. பக்தையின் மனதிலும் இது ஸ்புரித்திருக்க வேண்டும்.

பாமாலையை மனம் செலுத்தி மறுமுறை மாதுஸ்ரீ வேதாம்பாள் படிக்கத் தொடங்கியபோது அதில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவாளை வரிக்குவரி சாட்சாத் சிவபிரானாகவே துதித்து கவி இயற்றப்பட்ட நேர்த்தியினை பக்தை உணரமுடிந்தது. மனப்பூர்வமாக லயித்து படித்து இதை அறியச் செய்யவே

பாடியவர்: New Jersey ஸ்ரீ சுவாமிநாத பாகவதர் எழுதியவர்: ப்ரஹ்மஸ்ரீ சுப்ரமணிய கிருஷ்ணமூர்த்தி

Email: newjerseyswaminathan@gmail.com YouTube Link: https://youtu.be/m74s6dK3MM4
WhatsApp number: 001-7323258695

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவா இத்தனை முறை தனக்கு அருளியுள்ளார் போலும் என பக்தைக்கு தோன்றியது. அது எத்தனை சத்தியமென்பது ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவாளை அடுத்தமுறை சதாராவில் தரிசிக்க சென்றபோது நிகழ்ந்த அரிய சம்பவம் உறுதி செய்தது.

இந்த முறை பாமாலையை தான் அனுபவித்து உணர்ந்து கொண்ட நிலையில் மாமி அதை ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாபெரியவாளெனும் சங்கர சிவ சன்னதியில் உருக்கமாகப் பாட விரும்பி அதன்படியே அனுக்ரஹம் பெற்றார். அப்போது திரு. ஜோஷி எனும் பக்தர் ஒரு தட்டில் பூரா சர்க்கரையை சமர்ப்பித்து நின்றார். அதைத் தன் திருக்கரங்களில் இழுத்த ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவா அந்த பாக்கெட்டில் ஆங்காங்கே பொத்தலிட்டார். பின் கட்டைவிரல் மோதிரவிரல் இரண்டையும் சேர்த்து ஒரு சிட்டிகை பூரா சர்க்கரையை எடுப்பதும் மாமி பாமாலையின் ஒவ்வொரு வரியாக 'சங்கரசிவா' 'சங்கரசிவா' என முடிக்கும் போதும் ஒரு வரிக்கு ஒரு சிட்டிகையாக அத்தனை 126 வரிகளையும் கேட்டபடி தன் பவளவாய்க்குள் பூரா சர்க்கரையை லாவகமாக ஏற்றுக் கொள்வதுமாக ஒரு அரும்பெரும் அனுபவத்தை அனுக்ரஹித்தார். இது தன்னைத் துதித்து இயற்றிய கவிதை வரிகளின் பொருளையும் அதன் உண்மையையும் தானே ஒப்புதல் அளிப்பதுபோல சாட்சாத் சங்கர சிவனான ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவா அருளுவது போலிருந்தது. எப்பேற்பட்ட மேன்மையான ஏற்பு இது! பரந்தாமன் பக்த குசேலனின் அவலை மூன்றுமுறை சுவைத்தது போல் சங்கரன் இந்த பக்தி பாமாலைக்காக 126 முறை இனிப்பை சுவைப்பது போல அங்கீகரித்துள்ளார்.

இப்படி உயர்வு பெற்ற பாமாலையை வேதாம்பாள் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவா சன்னதியில் பாடும் பெரும்பேறு கிட்டிய ஆனந்தத்திற்காகவும், பொறுமையுடன் 126 வரிகளையும் கேட்டு கூடவே இனிமையான அனுபவத்தை அருளியதற்காகவும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவாளை கண்கள் பனிக்க நமஸ்கரித்தெழுந்தாள்.

இப்பேற்பட்ட தெய்வ அங்கீகாரம் இதோடு நின்றுவிடவில்லை. ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவா இந்த பாமாலைத் தொகுப்பை 86வது ஜயந்தி உற்சவத்தின் போது 87 பிரதிகள் எடுத்து பாரத பூமி எங்குமுள்ள பத்து சங்கரமடங்களுக்கும் பஜனை மடங்களுக்கும் அனுப்புமாறு உத்தரவிட்டருளினார்.

மேலும் ஹிக்கின்பாதம்ஸ் புத்தக நிறுவன அன்பர் திரு. குப்புசாமி அவர்கள் இந்த பாமாலையை புத்தகமாக வெளியிட ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாபெரியவாளிடம் ஆசி கேட்டபோது, அவரிடம் ஒவ்வொரு புத்தகத்திற்கும் ஐம்பது ரூபாய் என விலை நிர்ணயம் செய்யும்படியும், அதில் கிடைக்கும் பணத்தை திரயம்பகேஸ்வரர் கோயிலுக்கு சேர்ப்பிக்கவும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவா அருள் கட்டளையிட்டார்.

"எங்கிருந்தாலும் நின்னருளாசி
எங்களுக்குண்டு சங்கர சிவா"

என்று கிருட்டிணமூர்த்தி சொல் கவிமணி மாலையில் காணும் வரிகளைப் பற்றி ராஜீ என்ற பக்தரிடம் "இவர் இந்த பாட்டிலே என்கிட்டே சண்டைபோட்டு அனுக்ரஹம் வாங்குவது போல இருக்கோல்யோ" என்று ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பெரியவா குழந்தையாகக் கேட்டதிலிருந்தே இந்த பாமாலையை பக்தியுடன் பாடும் அனைவருக்கும் அந்த தெய்வத்தின் ஆசி நிச்சயமுண்டு என்பது உறுதியாகத் தெரிகின்றதல்லவா!

"தெய்வமாய் உன்னையே சங்கர குருவென
தாரணி போற்றிடும் சங்கர சிவா"

என்று இப்பாமாலை போற்றிடும் பெரும் தெய்வத்தை நாம் பற்றிக் கொண்டு வாழ்வில் சகல நலன்களையும், சௌபாக்யங்களையும் அடைவோமாக.

பாடியவர்: New Jersey ஸ்ரீ சுவாமிநாத பாகவதர்     எழுதியவர்: ப்ரஹ்மஸ்ரீ சுப்ரமணிய கிருஷ்ணமூர்த்தி

Email: newjerseyswaminathan@gmail.com     YouTube Link: https://youtu.be/m74s6dK3MM4

WhatsApp number: 001-7323258695

## ஸத்குரு கவசம்

குருவா யெமக்கருள் பெரிதாம் பரம்பொருள்
குருசங் கரரவர் பதமெண்ணி
அரிதாம் பிறவியிலிவரோ டிருப்பது
எனப்பூ ரிப்பது மிதமாக
அவரா யிருந்துயென் சிறிதா மதியினில்
தமிழட் சரப்பா தனைக் கூற
சிறியேன் பகன்றது சிறிதாயிறுப்பினும்
அருளோ டவரிதை அணிவாரே

## விநாயகர் காப்பு

**அருங்குருவாம் சங்கரர் மேல்**
**'அட்சரப்பா' மாலை சாற்ற**
**பெருங்கருணைக் கணபதி நீ**
**பதமருளிக் காப்பாயே!**

ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி
## ஸ்ரீ ஜகத்குரு தமிழட்சரப் பாமாலை

(126 மாலைகள்)

ஹரசங் கரசிவ ! ஜயசங் கரசிவ ! சிவசங் கரசிவ ! சங்கர சிவ !
ஹரசங் கரசிவ ! ஜயசங் கரசிவ ! சிவசங் கரசிவ ! சங்கர சிவ !

அண்ணா மலைவளர் அருணா சலமெனும்
சிவம் 'நீ' அலையோ சங்கர சிவா (1)

'அன்பே' சிவமென அவனியும் நலம் பெற
அவதரித் தாய்நீ சங்கர சிவா (2)

அன்னையும் தந்தையும் ஆகி யெமக்கருள்
ஆண்டவன் நீயே சங்கர சிவா (3)

அகங்கா ரமெனும் அகந்தையை நீக்கியே
'அருள்' விளக் கேற்றிடும் சங்கர சிவா (4)

அறுபத் தெட்டாம் குரு வெனக் கலியினில்
மறுமுறைத் தோன்றிய சங்கர சிவா (5)

ஆதி 'சங்கரர்' எனமுன் ஒரு தரம்
தோன்றிய தெய்வம் நீ சங்கர சிவா (6)

இவ்வுல கிற்கே 'ஒரு குரு' வாய் 'நீ'
இருந்திட வந்தாய் சங்கர சிவா (7)

ஈங்கிதை அறியாப் பேதையர் தமக்கே
எங்ஙனம் உரைப்பேன் சங்கர சிவா (8)

உலகக் குருவென உணர்ந்தவ ருளத்தினில்
உண்மையாய் உறைவாய் சங்கர சிவா (9)

ஊற்றிடும் அமுதென உனை நினைப் பவருளம்
ஊறிடு வாய் 'நீ' சங்கர சிவா (10)

எம்துய ரெல்லாம் உன்பதம் கண்டால்
எங்கோ போகுது சங்கர சிவா (11)

ஏழிரு புவனமும் படைத்தும் காத்தும்
அழித்தும் ஆள்வாய் சங்கர சிவா (12)

'ஐயன்' நீயென அறுபத்து மூவரும்
அழகாய் பாடினர் சங்கர சிவா (13)

ஒன்பது கோணமும் மேவிடும் சக்தியின்
ஒருபாகம் நீ சங்கர சிவா (14)

ஹரசங் கரசிவ ! ஜயசங் கரசிவ ! சிவசங் கரசிவ ! சங்கர சிவ !
ஹரசங் கரசிவ ! ஜயசங் கரசிவ ! சிவசங் கரசிவ ! சங்கர சிவ !

பாடியவர்: New Jersey ஸ்ரீ சுவாமிநாத பாகவதர் எழுதியவர்: ப்ரஹ்மஸ்ரீ சுப்ரமணிய கிருஷ்ணமூர்த்தி

Email: newjerseyswaminathan@gmail.com YouTube Link: https://youtu.be/m74s6dK3MM4
WhatsApp number: 001-7323258695

ஓங்காரம் எனும் ஒரு பொருள் நீயென்
றுணர்ந்தோம் நாங்கள் சங்கர சிவா (15)

'ஔவை' போற்றிடும் கணபதி முருகனின்
அப்பனும் நீயே சங்கர சிவா (16)

கண்ணுள் மணியாய் என்னுள் இருந்துமே
காத்திடு வாய் 'நீ' சங்கர சிவா (17)

காண்பவர் உளத்தே கவலையை மாற்றும்
கடைக்கண் கண்டோம் சங்கர சிவா (18)

கிரியெனத் தோன்றும் அருணையில் வாழும்
கருணைத் தெய்வமே சங்கர சிவா (19)

கீதையின் நாயகன் மாதவன் சோதரி
நாதனும் நீயே சங்கர சிவா (20)

குருமுகம் காணா குரு வென வாகி
குருதெய்வ மானாய் சங்கர சிவா (21)

கூற்றுவன் வந்தெமைக் கூப்பிடும்போது
காத்திடும் கூத்தன் 'நீ' சங்கர சிவா (22)

கெட்டவன் இவனென விட்டிடா துனதருள்
கொட்டி 'நீ' காத்தருள் சங்கர சிவா (23)

கேட்டிடும் அன்பர்தம் குறையினைக் கேட்டுமே
கேட்டவா றருள்புரி சங்கர சிவா (24)

'கை'யினால் அபயமே தந்துநீ நிற்பதால்
கவலைகள் ஓடிடும் சங்கர சிவா (25)

கொண்டிடும் அன்பினால் கண்டுனைப் பாடுவார்
காண்பது சொர்க்கமே சங்கர சிவா (26)

கோவிலில் கண்டிடும் மூர்த்தியில் உன்னருள்
கோலமே காண்கிறோம் சங்கர சிவா (27)

கௌமா ரத்தொடு வைணவர் சாக்தரும்
சைவரும் போற்றும் சங்கர சிவா (28)

ஹரசங் கரசிவ ! ஜயசங் கரசிவ !
சிவசங் கரசிவ ! சங்கர சிவ !
ஹரசங் கரசிவ ! ஜயசங் கரசிவ !
சிவசங் கரசிவ ! சங்கர சிவ !

பாடியவர்: New Jersey ஸ்ரீ சுவாமிநாத பாகவதர் எழுதியவர்: ப்ரஹ்மஸ்ரீ சுப்ரமணிய கிருஷ்ணமூர்த்தி

Email: newjerseyswaminathan@gmail.com YouTube Link: https://youtu.be/m74s6dK3MM4

WhatsApp number: 001-7323258695

சங்கர குருவென இருமுறை தோன்றிய
'சர்வேஸ்வரன்' நீ சங்கர சிவா (29)

சாற்றிடும் மந்திரப் பொருளாய் விளங்கிடும்
சச்சிவ சுந்தர சங்கர சிவா (30)

சிவமய மான உன் சுயதரி சனமதில்
சிவமய மானோம் சங்கர சிவா (31)

சீற்றமும் ஏற்றமும் மாற்றமு மில்லா
சீரிய சோதிநீ சங்கர சிவா (32)

சுந்தரன் பாடிய தேவாரம் புகழ்
சுந்தரன் நீயே சங்கர சிவா (33)

சூரியன் சந்திரன் நின்னிரு விழியெனச்
சொலித்திடக் கண்டோம் சங்கர சிவா (34)

செண்பக மாலையும் கொன்றையும் சூடும்
சிவபெரு மானே சங்கர சிவா (35)

சேர்ந்துனை யடைந்து சார்ந்தவர் துயரைச்
சேரா தொழிப்பாய் சங்கர சிவா (36)

சைவமாம் சமயம் தழைத்திடக் கலியினில்
தெய்வமாய் தோன்றிய சங்கர சிவா (37)

சொந்தமும் பந்தமும் பாசமு மகற்றியுன்
சிந்தனை தந்திடு சங்கர சிவா (38)

சோர்விலா மனமும் தாழ்விலா வாழ்வும்
தந்தருள் புரிவாய் சங்கர சிவா (39)

சௌரிய மாகவுன் பக்தரை வைத்திடச்
செய்வது உன்கடன் சங்கர சிவா (40)

ஞமலி என் சகலமும் நீயே என்றுனைச்
சரணடைந் துள்ளேன் சங்கர சிவா (41)

ஞானமும் தந்தபி மானமும் தந்துமெய்ஞ்
ஞானமும் தந்திடு சங்கர சிவா (42)

ஹரசங் கரசிவ ! ஜயசங் கரசிவ !
சிவசங் கரசிவ ! சங்கர சிவ !
ஹரசங் கரசிவ ! ஜயசங் கரசிவ !
சிவசங் கரசிவ ! சங்கர சிவ !

பாடியவர்: New Jersey ஸ்ரீ சுவாமிநாத பாகவதர் எழுதியவர்: ப்ரஹ்மஸ்ரீ சுப்ரமணிய கிருஷ்ணமூர்த்தி

Email: newjerseyswaminathan@gmail.com YouTube Link: https://youtu.be/m74s6dK3MM4
WhatsApp number: 001-7323258695

ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி

## ஸ்ரீ ஜகத்குரு தமிழட்சரப் பாமாலை

தத்துவப் பொருளாம் சத்திய சிவமுன்
பக்தியில் திளைத்தோம் சங்கர சிவா (43)

தானெனும் அகந்தை தன்னையே அகற்றியுன்
தன்னுடன் அணைத்திடு சங்கர சிவா (44)

தில்லையுட் கூத்தனாய் திகழ்ந்திடும் நின்னெழில்
தன்னிலே மூழ்கினோம் சங்கர சிவா (45)

தீமைகள் யாவையும் நீக்கியே எம்மையுன்
தண்ணளி சேர்த்திடு சங்கர சிவா (46)

துன்பமும் இன்பமும் இல்லனாய் உள்ளனாய்
திகழ்ந்திடும் அன்பன் நீ சங்கர சிவா (47)

தூய்மையாய் உள்ளமே நினைப்பவர் உளத்திலே
தீபமாய் ஒளிதரும் சங்கர சிவா (48)

தெய்வமாம் உன்னையே சங்கர குருவெனத்
தாரணி போற்றிடும் சங்கர சிவா (49)

தேடியே வந்துனை நாடியே நின்றவர்
தெய்வம் 'நீ' என்றனர் சங்கர சிவா (50)

தையினில் வணங்கிடும் சூரியன் ஒளியிலுன்
சோதியே காண்கிறோம் சங்கர சிவா (51)

தொல்லைகள் வந்தெமைத் துரத்திடும் போதினில்
வள்ளலாய் அருள்புரி சங்கர சிவா (52)

தோடுடைச் செவியனாய்ப் பாலமும் பிள்ளையின்
பசியினைப் போக்கினை சங்கர சிவா (53)

நள்ளிருள் தன்னிலே நட்டமே பயின்றிடும்
நட்டுவன் நீதான் சங்கர சிவா (54)

நாரணன் பிரம்மனும் தேடியே தேடொணா
நாயகி நாதன் நீ சங்கர சிவா (55)

நின்பத மலரினை நேரிலே நோக்கினால்
நெஞ்சமே நெகிழுது சங்கர சிவா (56)

ஹரசங் கரசிவ ! ஜயசங் கரசிவ !
சிவசங் கரசிவ ! சங்கர சிவ !
ஹரசங் கரசிவ ! ஜயசங் கரசிவ !
சிவசங் கரசிவ ! சங்கர சிவ !

பாடியவர்: New Jersey ஸ்ரீ சுவாமிநாத பாகவதர் எழுதியவர்: ப்ரஹ்மஸ்ரீ சுப்ரமணிய கிருஷ்ணமூர்த்தி

Email: newjerseyswaminathan@gmail.com YouTube Link: https://youtu.be/m74s6dK3MM4

WhatsApp number: 001-7323258695

நீருடை கங்கையும் திங்களும் சடையினில்
நின்றிடக் கண்டனர் சங்கர சிவா (57)

நுன்னுருத் தன்னையே நெஞ்சினில் பதித்தவ
நன்னெறி நாடினர் சங்கர சிவா (58)

நூல்பல கற்றவர் மறை சொலும் சாரமே
நீதான் என்றனர் சங்கர சிவா (59)

நெஞ்சம் பயின்றவர் தஞ்சமென்றடைவதால்
அஞ்சலென் றருள்புரி சங்கர சிவா (60)

நேர்மையும் நீதியும் நின்னடி யாரிடம்
நீங்கா திலங்குது சங்கர சிவா (61)

நைந்தவர் நலிந்தவர் நின்னருள் மழைவிழ
நீண்டே தழைத்தனர் சங்கர சிவா (62)

நொந்தவர் எவரும் உன்றனைக் கண்டபின்
வெந்துயர் நீங்கினர் சங்கர சிவா (63)

நோக்கியே நின்விழி நோக்கிய நேயர்கள்
நீங்கா நிலைத்தனர் சங்கர சிவா (64)

பதின்மூன் றாண்டினில் பட்டமே சூடிய
பெருங்குரு 'நீயே' சங்கர சிவா (65)

பார்ப்பவர் மனத்தில் பரவச மூட்டிய
பிள்ளையா யிருந்தாய் சங்கர சிவா (66)

பின்பல கலைதனை பயின்றே பணிவுற
பண்டிதன் ஆனாய் சங்கர சிவா (67)

பீடமடைந் தபின் நாடு நலம் பெற
பாடுபட் டிருந்தனை சங்கர சிவா (68)

புன்சிரிப்புடனே பூசைகள் செய்தபின்
புனித நீரளிப்பாய் சங்கர சிவா (69)

பூமியே போற்றிடும் புண்ணிய புருடனாய்
புகழ்பெறத் திகழ்ந்தாய் சங்கர சிவா (70)

ஹரசங் கரசிவ ! ஜயசங் கரசிவ !
சிவசங் கரசிவ ! சங்கர சிவ !
ஹரசங் கரசிவ ! ஜயசங் கரசிவ !
சிவசங் கரசிவ ! சங்கர சிவ !

பாடியவர்: New Jersey ஸ்ரீ சுவாமிநாத பாகவதர் எழுதியவர்: ப்ரஹ்மஸ்ரீ சுப்ரமணிய கிருஷ்ணமூர்த்தி

Email: newjerseyswaminathan@gmail.com YouTube Link: https://youtu.be/m74s6dK3MM4
WhatsApp number: 001-7323258695

பெற்றவர் இவன் யார் என்றே பலருமே
பெருமையாய்ப் போற்றினர் சங்கர சிவா (71)

பேதமாய் ஓடிய பலமதத் தோரும்
பணிவுடன் அடங்கினர் சங்கர சிவா (72)

பைந்தமி ழுடனே பலமொழி களையும்
பழுதறப் பயின்றாய் சங்கர சிவா (73)

பொன்னுரு வாகநின் தேகம் ஒளிபெறப்
பார்த்தோர் மகிழ்தனர் சங்கர சிவா (74)

'போற்றும் பெரியவாள்' எனப் பெயர் சொல்லி
பரிவாய் அழைத்தனர் சங்கர சிவா (75)

பௌவிய மாகவுன் பதமலர் பணிந்தே
பாப மொழிந்தனர் சங்கர சிவா (76)

மடமதாம் காஞ்சியை மட மட வெனவே
மலர்ந்திடச் செய்தாய் சங்கர சிவா (77)

மாண்புடைச் செல்வரை மடத்துட னிணைத்து
மேன்மைகள் சேர்த்தாய் சங்கர சிவா (78)

மிஞ்சிடும் அன்பினால் மாந்தர் நலம் பெற
மாதவம் புரிந்தாய் சங்கர சிவா (79)

மீளா நரகமே மேவும் மாக்களை
மாற்றிட விழைந்தாய் சங்கர சிவா (80)

மென்மையாம் மலரினும் மிருதுவாம் மனத்துடன்
மன்னுயிர் காத்தாய் சங்கர சிவா (81)

மேலும் பிறந்திவர் மாளாதிருக்க
மலர்வாய் மொழிந்தாய் சங்கர சிவா (82)

மையல் கொண்டிவர் மோகப் பேய்வசம்
மயங்கா மீட்டாய் சங்கர சிவா (83)

மொத்தமாய் இவர்களைப் பக்தியில் திளைத்திட
நித்தமு முழைத்தாய் சங்கர சிவா (84)

ஹரசங் கரசிவ ! ஜயசங் கரசிவ !
சிவசங் கரசிவ ! சங்கர சிவ !
ஹரசங் கரசிவ ! ஜயசங் கரசிவ !
சிவசங் கரசிவ ! சங்கர சிவ !

பாடியவர்: New Jersey ஸ்ரீ சுவாமிநாத பாகவதர் எழுதியவர்: ப்ரஹ்மஸ்ரீ சுப்ரமணிய கிருஷ்ணமூர்த்தி

Email: newjerseyswaminathan@gmail.com YouTube Link: https://youtu.be/m74s6dK3MM4

WhatsApp number: 001-7323258695

மோகத் திரையினை மெதுவாய் விலக்கியே
மின்னொளி காட்டினாய் சங்கர சிவா (85)

'மௌனப்' பெருநிலைப் பெரிதா மென்றிட
மௌனியா யிருந்தாய் சங்கர சிவா (86)

யமனார் வாயிவர் சேராதிருந்திட
ஒருவழி சொன்னாய் சங்கர சிவா (87)

யாதும் ஊரென புண்ணிய பாரதம்
பாதத்தால் நடந்தாய் சங்கர சிவா (88)

ரம்மியமாக நீ நன்னடை புரிந்துமே
யாத்திரை புரிந்தாய் சங்கர சிவா (89)

ராப்பகல் என்றே பாரா தெப்போதும்
பகலாய் நினைத்தாய் சங்கர சிவா (90)

லட்சியப் புருடனாய் நன்னெறி பரப்பிட
நாட்டினில் நடந்தாய் சங்கர சிவா (91)

வரும்வாக் கெல்லாம் 'அருள்வாக் கெனவே'
அருள் மழை பொழிந்தாய் சங்கர சிவா (92)

வாவென் றழைத்தே வருபவர்க் கெல்லாம்
வழி இது என்றாய் சங்கர சிவா (93)

விளங்காப் பொருளினை விளங்கும் வகையிலே
விளங்க வைத்தாய் நீ சங்கர சிவா (94)

வீட்டினைச் சேர்ந்திட வழிதான் கண்டிட
வீறுகொண் டழைத்தாய் சங்கர சிவா (95)

வெறுமையாம் வாழ்க்கையை வீணாய்க் கழித்திட
வேண்டா மென்றாய் சங்கர சிவா (96)

வேதப் பொருள் சொலும் நாதன் நீ என
உணர்த்திடச் செய்தாய் சங்கர சிவா (97)

வையகம் போற்றிடும் பரசிவன் நீ என
புரிந்திடச் செய்தாய் சங்கர சிவா (98)

ஹரசங் கரசிவ ! ஜயசங் கரசிவ !
சிவசங் கரசிவ ! சங்கர சிவ !
ஹரசங் கரசிவ ! ஜயசங் கரசிவ !
சிவசங் கரசிவ ! சங்கர சிவ !

பாடியவர்: New Jersey ஸ்ரீ சுவாமிநாத பாகவதர்    எழுதியவர்: ப்ரஹ்மஸ்ரீ சுப்ரமணிய கிருஷ்ணமூர்த்தி

Email: newjerseyswaminathan@gmail.com    YouTube Link: https://youtu.be/m74s6dK3MM4

WhatsApp number: 001-7323258695

பழுத்திடும் பழம் நீ பறந்திடும் கிளிநாம்
என இனி ஆனோம் சங்கர சிவா (99)

பத்ததியோடு நீ பின்னொரு சீடரை
பாரினுக் களித்தாய் சங்கர சிவா (100)

இளம்குரு கண்டு இம்மடமளித்து
மகுடம் சூட்டினை சங்கர சிவா (101)

குருவென நின்று கலைபல நவின்று
'புது குரு' வாக்கினை சங்கர சிவா (102)

புதுவெள் ளம்போல் பெருக்கெடுத்தோடும்
பாங்கினைக் கண்டாய் சங்கர சிவா (103)

பாரோர் நலம்பெற பெருந்தவம் பேண
பிரிந்தாய் மடத்தை சங்கர சிவா (104)

எங்கே போகிறாய் எனச் சொல்லாமல்
எங்கோ போகிறாய் சங்கர சிவா (105)

ஏங்கிடும் கன்றாய் பரிதவிக் கின்றோம்
'பசுபதி' உன்னால் சங்கர சிவா (106)

சித்தன் போக்கு சிவன் போக்கென்றே
சுற்றியே திரிகிறாய் சங்கர சிவா (107)

சத்தியம் காக்கும் தவப்பெருந்தகையாய்த்
தரணியில் வாழ்கிறாய் சங்கர சிவா (108)

எங்கிருந்தாலும் நின்னருளாசி
எங்களுக்குண்டு சங்கர சிவா (109)

எக்கணந் தன்னிலும் உன் நினைவேதான்
எங்களுக் கிருக்கும் சங்கர சிவா (110)

வண்ணப் படத்தில் உன்னெழிலைத்தான்
என்றும் பார்க்கிறோம் சங்கர சிவா (111)

எண்ணப் படத்திலும் வண்ணப் படத்தை
எழுதியே வைத்தோம் சங்கர சிவா (112)

ஹரசங் கரசிவ ! ஜயசங் கரசிவ !
சிவசங் கரசிவ ! சங்கர சிவ !
ஹரசங் கரசிவ ! ஜயசங் கரசிவ !
சிவசங் கரசிவ ! சங்கர சிவ !

பாடியவர்: New Jersey ஸ்ரீ சுவாமிநாத பாகவதர் எழுதியவர்: ப்ரஹ்மஸ்ரீ சுப்ரமணிய கிருஷ்ணமூர்த்தி

Email: newjerseyswaminathan@gmail.com YouTube Link: https://youtu.be/m74s6dK3MM4

WhatsApp number: 001-7323258695

அருளிடும் கரமும் சிரித்திடும் முகமும்
அழகாய்த் தெரியுது சங்கர சிவா (113)

அனைத்தினும் மேலாய் பதமலர் தன்னில்
அடைக்கலம் கிடைக்குது சங்கர சிவா (114)

நின் நினைவின்றி பிறநினைவெல்லாம்
கசப்பா யிருக்குது சங்கர சிவா (115)

நின் புகழன்றி மற்றெதும் பேச
கூசுது நாவும் சங்கர சிவா (116)

நின்பெய ரன்றி மறுபெயர் கேட்க
காதும் மறுக்குது சங்கர சிவா (117)

நின்தொண் டினுக்கே கைகால் மெய்யும்
காத்தே கிடக்குது சங்கர சிவா (118)

இக்கலி தன்னில் உன்னுடன் பிறக்க
எத்தவம் புரிந்தோம் சங்கர சிவா (119)

அக்களிப் பினிலே அகமகிழ்ந்தே நாம்
பூரிப் படைகிறோம் சங்கர சிவா (120)

காலால் இடுவதைக் கையால் செய்யக்
காத்திருக் கின்றோம் சங்கர சிவா (121)

கனிவாய் நீயிடும் கட்டளைக்கே நாம்
பணிவாய் நிற்கிறோம் சங்கர சிவா (122)

குருநின் பதமலர் கருத்தினில் வைத்தே
கவிமழை பொழிந்தேன் சங்கர சிவா (123)

குறைபல பொறுத்து நிறைசில எடுத்து
பரிவுடன் ஏற்றிடு சங்கர சிவா (124)

கிருட்டிண மூர்த்திசொல் கவிமணி மாலையை
கருணையோ டணிந்திடு சங்கர சிவா (125)

பிரதியாய் எமக்கு நீ பிறவாதிருந்திடும்
பெருநிலை தந்திடு சங்கர சிவா (126)

ஹரசங் கரசிவ ! ஜயசங் கரசிவ ! சிவசங் கரசிவ ! சங்கர சிவ !
ஹரசங் கரசிவ ! ஜயசங் கரசிவ ! சிவசங் கரசிவ ! சங்கர சிவ !

குரு சங்கரர் வாழி !
அவரன்பரும் வாழி !
அட்சரப் பாமாலை வாழி !

பாடியவர்: New Jersey ஸ்ரீ சுவாமிநாத பாகவதர் எழுதியவர்: ப்ரஹ்மஸ்ரீ சுப்ரமணிய கிருஷ்ணமூர்த்தி


Email: newjerseyswaminathan@gmail.com YouTube Link: https://youtu.be/m74s6dK3MM4

WhatsApp number: 001-7323258695

ஹர சங்கர சிவ। ஜய சங்கர சிவ। சிவ சங்கர சிவ। சங்கர சிவ।
ஹர சங்கர சிவ। ஜய சங்கர சிவ। சிவ சங்கர சிவ। சங்கர சிவ।

ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி

## ஸ்ரீ ஜகத்குரு தமிழட்சரப் பாமாலை




பாடியவர்: New Jersey ஸ்ரீ சுவாமிநாத பாகவதர் எழுதியவர்: ப்ரஹ்மஸ்ரீ சுப்ரமணிய கிருஷ்ணமூர்த்தி

Email: newjerseyswaminathan@gmail.com YouTube Link: https://youtu.be/m74s6dK3MM4

WhatsApp number: 001-7323258695